## செப்டம்பர் - 3

**"பலியை அல்ல, இரக்கத்தையும், தகன பலியைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்."**

**- ஓசி 6 : 6**

தன் சித்தத்தை, தன் இருதயத்தை கர்த்தருக்குக் கொடுக்கிறவன் எல்லாவற்றையும் கொடுக்கிறான். (தன் சித்தத்தைக் கொடுக்காதவன், கர்த்தருக்கு இருதயத்தின் கீழ்படிதலைக் கொடுக்காதன். ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்த பலியையும் கர்த்தருக்குச் செலுத்த முடியாது.) "பலியை பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம்" என்கிற படிப்பினை கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிற எல்லாருடைய இருதயத்திலும் ஆழமாக செதுக்கப்பட்டிருக்க வேண்டும். கீழ்ப்படிதலின் ஆவியை உடையவர்களாயிருப்பது அவசியமும் கூட கீழ்ப்படிதலின் ஆவியையுடைய யாராகிலும் தெய்வீகச்சித்ததுக்குக் கீழ்ப்படிகிறது மட்டுமல்லாமல் அதற்கு கீழ்படிய வேண்டுமென்பதற்காக, அதிகமதிகமாக தெய்வீகச் சித்தத்தை அறிய நாடுவான். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்த உடனே அவைகளை உட்கொண்டேன்" என்று இந்த வகுப்பாரைக் குறித்துதான் வேதாகமம் சொல்லுகிறது. மேலும் நமது கர்த்தரும், "என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது." என்று சொன்னார்.

**- Z ’03, 220 (R 3224)**

துர்பாக்கியமானவர்களின் குறைதீர்க்கும் பச்சாத்தாபமே இரக்கம். இந்த வாக்கியத்திலுள்ள பலியையும் தகனபலியும் சத்தியத்துக்கும் அதன் ஆவிக்கும் மாறான ஒரு நிதான மற்ற செயல் தேவனை அறிகிற அறிவே தெய்வீக சத்தியம். கர்த்தர் நமது ஊழியத்தை விரும்புகிறதில்லை என்று அவர் எண்ணுகிறதாக நாம் அர்த்தம் செய்யக்கூடாது. கருத்து என்னவெனில், சத்தியத்துக்கும் அதன் ஆவிக்கும் மாறாக எப்பொழுதும் அவ்வளவு ஊக்கமாக உழைப்பதைப் பார்க்கிலும், ஊழியத்தை ஒதுக்கி வைத்தும்கூட நம்முடைய இருதயங்களில் சத்தியத்தையும் அதன் இரக்கத்தின் ஆவியையும் மிகப்பெரிய அளவில் வைத்திருப்பது கர்த்தருக்கு நல்லதென்று தெரிகிறது. பரிசுத்தமில்லாத குணத்தையுடைய ஒரு சுறுசுறுப்புள்ள அறியாமையிலுள்ள ஊழியக்காரனைவிட, ஒரு இரக்கமுள்ள புத்தியுள்ள பரிசுத்தவான் கர்த்தருக்கு அதிகமாக பிரியமானவனாயிருக்கிறான். ஒன்று கலந்த இரக்கமும் ஊழியமும், அறிவுமே தேடப்பட வேண்டிய சிறந்த லட்சியங்கள்.

**- P ’36, 109, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1சாமு 15:22; சங் 50:7-15; பிர 5:1; ஏசா 1:10-20; 58; மத் 12:7; மீகா 6:6-8; எரே 7 :21-28; தானி 4:27; ஆமோ 5:21-26; மத் 5:7; 9:13; நீதி 21:3; மாற் 12:33; ஓசி 4:1; 6:6; 1நாளா 29:9; எரே 22:16; 1யோவா 2:3; 3:6.

**கோபுர வாசிப்பு** : Z ’13, 275 (R 5309).

**வினாக்கள்** : இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?